**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Civil Procedure)**

**<u>அசல் வழக்கு எண்.109/2013 C/W.OS.No.536/2014.</u>**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பெரும்புதூர் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12ம் நாள். வா.த.சா.1. சரவணன், அவர்களுக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | வயது : | | |
| த/பெ. | : | சண்முகம் | இனம் : | | |
| கிராமம் | : | | தொழில் : | | |
| சமயம் | : | | தாலுக்கா : | | |

**<u>வா.த.சா.1- குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ11 எனது தந்தை பெயரில் உள்ள கிரய ஆவணத்தில் நான்கு சாட்சிகளான கேசவன், துரை, லோகு மற்றும் அன்பு ஆகியோர்கள் கையெழுத்து இட்டுள்ளனர் என்றால் சரிதான். அதில் இரு நபர்கள் கையொப்பமும், இரு நபர்கள் கையெழுத்து இட்டதாக தான் உள்ளது என்றால் அதை நான் மறுக்கிறேன். ஒரு நபர் தான் கையொப்பம் இட்டுள்ளார். அந்த நான்கு சாட்சிகளின் தகப்பனார் பெயர்களோ, விலாசமோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதில் கேசவன் மற்றும் துரை சாட்சிகள் தற்போது உயிருடன் இல்லை. வழக்கின் பிரதிவாதிகளான அருணாச்சாலத்தின் சொத்தும் வழக்கு சொத்தும் பக்கத்து பக்கத்து இடத்தில் உள்ளது என்றால் அதை நான் மறுக்கிறேன். வழக்கு சொத்தின் பின்புறத்தை பிரதிவாதி புழக்கடையாக பயன்படுத்தி வருகிறார் என்றார் அதை நான் மறுக்கிறேன். வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் நான் தான் வசித்து வருகிறேன்.

2. வழக்கு சொத்தின் பின் புறத்தில் பிரதிவாதி மரங்களை நட்டு வளர்த்து வருகிறார் என்றார் அதை நான் மறுக்கிறேன். புல எண்.1319/5 ல் பிரதிவாதியும் 1319/3ல் நானும் வசித்து வருகிறோம். நான் தான் 1319/3ன் உரிமையாளர் என்பதற்காக இந்நீதிமன்றத்தில் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அதை நான் மறுக்கிறேன். வழக்கின் பிரதிவாதியான அருணாச்சலமோ அவரது சகோதரர் கருணாகரனோ எனது தந்தைக்கு எந்தவிதமான கிரய ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை, அப்படி எழுதிக்கொடுத்திருக்கும்

பட்சத்தில் எனது தந்தையையும் வழக்கில் சேர்த்திருப்பார்கள் என்றால் அதை நான் மறுக்கிறேன். அவர்கள் இறந்த பிறகு வா.த.சா.ஆ11 ஐ கிரய ஆவணத்தை வழக்கிற்காக போலியாக சேர்த்துள்ளேன் என்றால் அதை நான் மறுக்கிறேன். 1992ம் ஆண்டு கிரயம் செய்தபோது எனது தந்தை மற்றும் கருணாகரன் உயிருடன் தான் இருந்தார்கள். அந்த சமயத்தில் எந்தவிதமான பிரச்சனையும் ஏற்படவில்லை. வா.த.சா.ஆ11 பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். நம்பிக்கையின் பெயரில் பதிவு செய்யப்படவில்லை. இது நாள் வரை அசல் வழக்கு எண்.536/2014ல் அருணாச்சலம் தடை உத்தரவு பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். IA No.157/2016 போலிஸ் பாதுகாப்பு கேட்டு அது அவர் தரப்பில் தீர்ப்பான விவரம் தெரியுமா என்றால் தெரியும். அதற்கு மேல்முறையீடு செய்து தடை உத்தரவு பெற்றுள்ளேன். CRP No.1136/2016 தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதை நான் மறுக்கிறேன். வா.த.சா.ஆ1 அனுபவ சான்றிதழ் வழங்கிய தாசில்தார் பெயர் குறிப்பிட்டு தெரியுமா என்றால் தெரியாது. அந்த தாசில் தார் போலி ஆவணங்களில் கையெழுத்து போட்டதற்காக பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்றால் அதன் விவரம் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தின் புல எண்.451/3க்கு தான் அனுபவ சான்றிதழ்கள் அளித்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு புல எண்.1319/5 தான் சரியான புல எண் மேற்சொன்ன அனுபவ சான்றிதழ் போலியாக பெறப்பட்டுள்ளது என்றால் அதை நான் மறுக்கிறேன். புல எண் 451 /3 தான் இடைப்பட்ட காலத்தில் மாற்றப்பட்டுள்ளது. வழக்கு சொத்தில் கண்டுள்ள விலாசமும் வா.த.சா.ஆ1 அனுபவ சான்றிதழில் கண்டுள்ள விலாசமும் வெவ்வேறு என்றால் அதை நான் மறுக்கிறேன்.

3. அனுபவ சான்றிதழ் வா.த.சா.ஆ1 இவ்வழக்கு சொத்திற்கு சம்மந்தம் இல்லாதது என்றால் அதை நான் மறுக்கிறேன். வா.த.சா.ஆ2 குடும்ப அட்டையில் கண்டுள்ள விலாசமும் வழக்கு சொத்தின் விலாசமும் வெவ்வேறு என்றால் அதை நான் மறுக்கிறேன். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ3ல் என்னால் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பில் புல எண்.451/3 அதன் புது புல எண்.13/19 என்று கண்டுள்ளது என்றால் சரிதான் அது தவறுதலாக அளிக்கப்பட்டுள்ளது. எனது வழக்கறிஞர் வழக்கின் விவரம் தெரியாமல் அறிவிப்பை அனுப்பியுள்ளார் என்றால் அதை நான் மறுக்கிறேன். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ5 தான் என்னால் அருணாச்சலத்தின் மீது வழங்கப்பட்ட சி.எஸ்ஆர் என்றால் சரிதான். அந்த சி.எஸ்ஆர் -ல் கதவு எண்.2/304, பஜனை கோயில் தெரு, வடக்கு பிள்ளையாம்பாக்கம் என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ6ல் வீட்டு வரி ரசீதுகளில் கதவு எண்ணோ, ஒப்பமோ இல்லை என்றால் அதை நான் மறுக்கிறேன். வழக்கை தாக்கல் செய்த பின் மேற்சொன்ன ரசீதுகளை தாக்கல் செய்யப்பட்டுள்ளது

என்றால் அதை நான் மறுக்கிறேன். வா.த.சா.ஆ7ல் தண்ணீர் வரி ரசீதுகளில் கதவு எண்ணோ, ஒப்பமோ இல்லை என்றால் அதை நான் மறுக்கிறேன். எந்த ஆவணமும் வழக்கு தாக்கல் செய்தபின்பு தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதை நான் மறுக்கிறேன். வா.த.சா.ஆ8 கேஸ் ரசீதுகளில் கதவு எண் குறிப்பிடவில்லை வழக்கு தொடுத்தப்பின்பு தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் அதை நான் மறுக்கிறேன். வா.த.சா.ஆ9 ல் உள்ள புகைப்படத்தில் உள்ள இடத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் அதை நான் மறுக்கிறேன். நான் தான் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்பதற்கு எந்தவிதமான பதிவு செய்யப்பட்ட ஆவணம் இல்லை மேலும் வா.த.சா-ஆ2 முதல் 10 ஆனது வழக்கு தொடுத்தப்பின்பு தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் அதை நான் மறுக்கிறேன். வழக்கின் பிரதிவாதியான அருணாச்சாலம் வழக்குசொத்தின் உரிமையாளர் அவர் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் அதை நான் மறுக்கிறேன். அவர் தான் தற்போது வழக்கு சொத்தில் வீடு கட்டி வாழ்ந்து வருகிறார் என்றால் அதை நான் மறுக்கிறேன்.

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

**(Sd/-.Saranya Selvam)**
District Munsif,
Sriperumbudur. (FAC)